


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.2.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 2058 முகாம்களில், 3.50 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ், பயனாளிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு ஒதுக்கீட்டிற்கான ஆணையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மறைந்த திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.வேணுகோபால் அவர்களின் உடலுக்கு, கழக பொதுச்செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன், கதிர்ஆனந்த்.எம்.பி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

# நல உதவிகள் வழங்கி முதல்வர் உரை!… முதல் பக்கத் தொடர்ச்சி

பெறப்பட்ட மனுக்களை முதலில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்கிறார்கள். அதன்பிறகு தொடர்புடைய துறைக்கு அனுப்புகிறார்கள். முப்பதே நாட்களில் இந்த நடவடிக்கைகள் மூலமாக, நான் பெருமையோடு சொல்கிறேன், 3 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட இருக்கிறது. இது மிகப்பெரிய எண்ணிக்கை.

இது தொடர்பாக, மேலும் சில புள்ளிவிவரங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

- வருவாய்த் துறையில் 42 ஆயிரத்து 962 பட்டா மாறுதல்களும், 18 ஆயிரத்து 236 நபர்களுக்குப் பல்வேறு வகையான சான்றிதழ்களும் தரப்பட்டிருக்கிறது.
- மின்சார வாரியத்தில் 26 ஆயிரத்து 383 நபர்களுக்கு புதிய மின் இணைப்புகள்/ பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறது.
- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக,

37 ஆயிரத்து 705 நபர்களுக்கு வரிவிதிப்பு /குடிநீர்/ கழிவுநீர் இணைப்பு/ கட்டட அனுமதி/ பிறப்பு, இறப்பு பதிவுகள் போன்றவை செய்து தரப்பட்டிருக்கிறது.

- குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை மூலம் ஆயிரத்து 190 நபர்களுக்கு 60 கோடியே 75 லட்ச ரூபாய் மதிப்பில் தொழில் கடன் உதவி செய்து தரப்பட்டிருக்கிறது.
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 10 கோடி ரூபாய் மதிப்பில் 3 ஆயிரத்து 659 நபர்களுக்கு 3 சக்கர வாகனம்/ கடன் உதவிகள்/ கருவிகள்/அடையாள அட்டைகள் தரப்பட்டிருக்கின்றன.
- கூட்டுறவுத்துறை மூலமாக, 6 கோடியே 66 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 766 நபர்களுக்கு கடன் உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**இதைவிடப் பெரிய வெற்றி இருக்க முடியுமா?**

இப்படி, முப்பதே நாட்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் பேரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இங்கே பதிவு செய்ய விரும்புறேன். இதைவிட பெரிய வெற்றி இருக்க முடியுமா? இத்தனை இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடைந்து இருக்கிறார்கள்.

எல்லா மாவட்டங்களிலும், மேற்படி முகாம்களில் அளித்த கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டு, அந்தப் பயனாளிகளுக்கு அவ்வப்போது நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இன்றைக்கும், எல்லா மாவட்டங்களிலும், நடைபெற்று வரும் இந்த நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சிகளில் காணொலி வாயிலாக நானும் பங்கேற்றிருக்கிறேன்.

பல ஆண்டுகளாக, நிலுவையில் இருந்த கோரிக்கைகள் இந்தச் சிறப்பு முகாம்கள் மூலமாக முடிவுற்றதை பத்திரிகைகள், செய்தி ஊடகங்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

**விடிவு காண்பதே நோக்கம்!**

'மக்கள் அளிக்கும் ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பதே முக்கியம்' என்று நினைக்காமல், 'விடிவு காண்பதே நோக்கம்' என்று செயல்பட்டால் தான் அரசின் மேல் ஏழைகள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை வலுவடையும். அத்தகைய நம்பிக்கையை விதைக்கின்ற திட்டமாக 'மக்களுடன் முதல்வர்' திட்டம் அமைந்திருக்கிறது. இதற்குக் காரணமான அமைச்சர்களையும், அனைத்து அரசு அதிகாரிகளையும் நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் மற்றுமொரு சிறப்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்குப் பணி ஆணை வழங்கியிருக்கிறோம். கழகம் ஆட்சிக்கு வந்தது முதலாவே, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகமாக உருவாக்கிக் கொண்டு வருகிறோம். முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக, பல்வேறு புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு வருகிறது.

இது வரை 60 ஆயிரத்து 567 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் தேர்வாணைய முகமைகள் மூலமாக 27 ஆயிரத்து 858 பணியிடங்களுக்குப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 ஆயிரம் புதிய பணியிடங்கள்!**

அடுத்த இரண்டு ஆண்டுகளில், மேலும் 50 ஆயிரம் புதிய பணியிடங்கள் நிரப்பப்படும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் 10 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத் தான், இன்றைக்கு 1,598 பணியிடங்களுக்குத் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகிறது. பணி நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முழு ஈடுபாடு, அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுவீர்!**

பணி நியமன ஆணைகளைப் பெற்றுள்ள இளைஞர்கள், உங்களை நாடி வரும் பொதுமக்களுக்கு, அரசின் சட்ட வரையறைக்கு உட்பட்டு அவர்களின் குறைகளைக் களைய முழு ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டு, விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## 'மக்களுடன் முதல்வர்' திட்டப் பயனாளிகளுக்கு நல உதவிகள்!

# 1598 பேருக்கு அரசுப் பணிக்கான நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப். 17-

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 1598 இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.2.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 2058 முகாம்களில், 3.50 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 1598 இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார்.

"மக்களுடன் முதல்வர்"" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் எரிசக்தித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் முதற்கட்டமாக அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் சுமார் 2058 முகாம்கள் நடத்தப்பட்டன. அடுத்தகட்டமாக அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரகப்பகுதிகளில் முகாம்கள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது நடைபெற்ற முகாம்கள் வாயிலாக இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3.50 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

இவற்றில் குறிப்பாக. வருவாய்த் துறை மூலமாக 42,962 பட்டா மாறுதல்கள் மற்றும் 18,236 நபர்களுக்கு உதவித் தொகைகள்;

எரிசக்தி துறை / மின்சார வாரியம் மூலமாக 26,383 நபர்களுக்கு புதிய மின் இணைப்புகள்/ பெயர் மாற்றங்கள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக 37,705 நபர்களுக்கு வரிவிதிப்பு / குடிநீர் / கழிவுநீர் இணைப்பு / கட்டட அனுமதி / பிறப்பு, இறப்பு பதிவுகள்;

ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக 62 இலட்சத்து 60 ஆயிரத்து 40 ரூபாய் மதிப்பில் 435 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா / தையல் இயந்திரம் / கடனுதவிகள்;

மகளிர் மேம்பாடு துறை மூலமாக 1 கோடியே 42 இலட்சத்து 26 ஆயிரத்து 639 ரூபாய் மதிப்பில் 23 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்குதல்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலமாக 1190 நபர்களுக்கு 60 கோடியே 75 இலட்சத்து 47ஆயிரம் ரூபாய் மதிப்பில் தொழில் கடன் உதவி வழங்குதல்;

சமூக நலத்துறை மூலமாக 1768 நபர்களுக்கு தையல் இயந்திரம்/ பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் / புதுமைப்பெண் திட்டப் பயன்கள் வழங்குதல்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக 9 கோடியே 46 இலட்சத்து

49 ஆயிரத்து 253 ரூபாய் மதிப்பில் 3,659 நபர்களுக்கு மூன்று சக்கர வாகனம் /கடன் உதவிகள் / உபகரணங்கள் / அடையாள அட்டைகள் வழங்குதல்;

கூட்டுறவுத்துறை மூலமாக 6 கோடியே 66 இலட்சத்து 62 ஆயிரத்து 545 ரூபாய் மதிப்பில் 766 நபர்களுக்கு கடன் உதவி வழங்குதல்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலமாக 15,504 நபர்களுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டை / ஓய்வூதியங்கள் வழங்குதல்;

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலமாக 2 கோடியே 10 இலட்சத்து 51 ஆயிரத்து 380 ரூபாய் மதிப்பில் 3,376 நபர்களுக்கு தையல் இயந்திரம் / தேய்ப்பு பெட்டி வழங்குதல்;

இவ்வாறு 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்கள் வாயிலாக பயனடைந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (16.02.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பிற மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்களாலும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாலும் இத்திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 1598 இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் 44 உதவி ஜெயிலர் பணியிடங்கள், கால்நடை பராமரிப்புத் துறையில் 697 கால்நடை உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் பணியிடங்கள், புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் 29 உதவி புவியியலாளர் பணியிடங்கள், பொதுப்பணித் துறையில் 11 உதவி புவியியலாளர் பணியிடங்கள், 302 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், நெடுஞ்சாலைத் துறையில் 32 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், நீர்வளத்துறையில் 201 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 93 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் 63 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள்,

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் 12 உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், வேளாண்மை பொறியியல் துறையில் 65 உதவி பொறியாளர் பணியிடங்கள், போக்குவரத்துத் துறையில் 5 ஆட்டோமொபைல் பொறியாளர் பணியிடங்கள், 7 ஜென்ரல் போர்மேன் பணியிடங்கள், 11 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் 18 உதவி இயக்குநர் (தொழில் பாதுகாப்பு) பணியிடங்கள், மின்சார துறையில் 8 இளநிலை மின் ஆய்வாளர் பணியிடங்கள், என மொத்தம் 1598 பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், காணொலிக் காட்சி வாயிலாக விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையை சேர்ந்த பெண் பயனாளி திருமதி வளர்மதி ரத்னகுமார் அவர்கள் பேசும் போது, கடந்த டிசம்பர் மாதம் எங்கள் ஊரில் "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம் நடைபெற்றது, அதுவும் என் வீட்டிற்கு பக்கத்திலேயே நடைபெற்றது. அங்கு நான் சென்று சானிடேரி நாப்கின் தயார் செய்திட மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி கேட்டு மனு கொடுத்திருந்தேன். கொடுத்த உடன் என்னுடைய மனுவை இணைதளத்தில் பதிவு செய்து விட்டார்கள். மூன்றே நாட்களில் மாவட்ட தொழில் மையத்திலிருந்து தொடர்பு கொண்டு என்னை நேர்முக தேர்வுக்கு அழைத்து, எடுத்து வர வேண்டிய ஆவணங்கள் குறித்து தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். நான் அதையெல்லாம் எடுத்துச் சென்று நேர்முக தேர்வில் கலந்து கொண்டேன். ஆவணங்களை எல்லாம் சரிபார்த்து, உடனடியாக என்னுடைய வங்கிக்கு கடிதம் அனுப்பினார்கள். மனு கொடுத்த ஒரு மாதத்திலேயே எனக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய்க்கான வங்கி கடனுதவி பெற்றேன். மக்களுடன் முதல்வர் திட்டத்தின் பயனால் நான் ஒரு தொழில்முனைவோராக உருவாகியுள்ளேன். இதன்மூலம் எனது குடும்பத்தின் பொருளாதாரம் வாழ்வாதாரமும் உயர்ந்திட வழிவகை செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பயனாளிகள் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டத்திலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், ஏ.ஆர்.ஆர். ரகுமான், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், திருப்பூர் மாவட்டத்திலிருந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர்

தா. கிறிஸ்துராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், தேனி மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்

கம்பம் ராமகிருஷ்ணன், ஏ. மகாராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் காணொலிக் காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர் திருமதி எம். லட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சிவகங்கை மாவட்டம் - சாக்கோட்டை மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் - 'முரசொலி' முகவர் -**

# டி.சூரக்குடி கிளைச் செயலாளர் ப.பழனியப்பன் மறைவு!


## குடும்பத்தினருக்கு - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆறுதல்!

*காரைக்குடி, பிப். 17-*

*சிவகங்கை மாவட்டம் - சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழக அவைத் தலைவரும், டி.சூரக்குடி ஊராட்சி கிளைச் செயலாளரும், 'முரசொலி' முகவருமான ப.பழனியப்பன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது உடலுக்கு ஏராளமான கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், அன்னார் இல்லம் சென்று, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.*

*கழக மூத்த முன்னோடியும், டி.சூரக்குடி ஊராட்சி கிளைச் செயலாளராகப் பல ஆண்டு காலம் பதவி வகித்து கழகப் பணியாற்றியவருமான பரமசாமி - திருமதி சின்னம்மாள் ஆகியோ*



*ரின் புதல்வர், பழனியப்பன்.*

*தந்தை வழியில் கழகத்திற்கு ஓய்வின்றி உழைத்தவர், கொண்ட கொள்கையில் இருந்து கிஞ்சிற்றும் வழுவிடாதவர், கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்று, கழகக் கொள்கை காத்தவர் ப.பழனியப்பன்.*

*தேர்தல் காலங்களில், கழகம் மற்றும் கழகக் கூட்டணியின் வெற்றிக்கு பம்பரமெனச் சுற்றிச் சுழன்று பணியாற்றும் இயல்பினர் அவர்.*

*'முரசொலி'யின் முகவராகவும் இருந்து, அன்றாடம் சந்தாதாரர்களின் இல்லம் தோறும் சென்று முரசொலி விநியோகிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவர், அதனைத் தமது பெருமையாகக் கருதி உழைத்தவர் அவர்.*

*டி.சூரக்குடி ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர் ப.பழனியப்பனின் மறைவு, சிவகங்கை மாவட்டக் கழகத்திற்கு, குறிப்பாக, சாக்கோட்டை ஒன்றியக் கழகத்துக்கு இழப்பு எனின் அது மிகையல்ல.*

*பழனியப்பனுக்கு மீனாள் எனும் மனைவியும், இவ்விணையருக்கு காஞ்சனா, இலக்கியா எனும் இரு மகள்களும், கோவிந்தசாமி எனும் மகனும் உள்ளார்கள்.*

*மறைந்த ப.பழனியப்பனின் உடலுக்கு கழக முன்னணியினரும், நிர்வாகிகளும், தோழர்களும், ஊர்ப் பெருமக்களும், இசை வேளாளர்கள் சங்க நிர்வாகிகளும் என ஏராளமானோர் மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள், குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.*

*அவரது இறுதி ஊர்வலத்திலும் ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.*

*மறைந்த - கழகக் கிளைச் செயலாளர் பழனியப்பன் இல்லத்திற்கு, சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் சென்று, பழனியப்பன் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். நிதியுதவி வழங்கினார்.*